

# தேசிய விழிப்புணர்வை ஊட்டி வளர்ப்பதில் தொடர்பு சாதனங்கள் ஆற்றும் சேவை பெரிது

**தலைவர் பிரபாகரன்**

ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் வகிக்கும் பங்கு எத்தனை முக்கியம் வாய்ந்தது என்பதனை நான் விளக்கிக் கூறத் தேவையில்லை. போராட்டத்தின் எதார்த்த நிலையை புறநிலை உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன் மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் விடுதலையுணர்வையும் ஊட்டிவளர்த்து மக்களின் கருத்துலகத்தைக் கட்டி வளர்ப்பதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் அரிய சேவை ஆற்ற முடியும். இந்த வழியில் எமது தேசிய பத்திரிகைகளும் எமது வானொலியும் மக்களின் விடுதலைக்கு பணியாற்றுவது அவசியம்.

இவ்வாறு புலிகளின் குரல் ஓராண்டு பூர்த்தி விழாவிற்கு தலைவர் பிரபாகரன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ் வாழ்த்துச் செய்தியில், எமது விடுதலை இயக்கத்தின் புரட்சிக் குரலாக ஒலித்து வரும் 'புலிகளின் குரல்' இன்றுடன் தனது ஓராண்டு சேவையைப் பூர்த்திசெய்து கொள்கிறது.

ஒரு யுத்த சூழலில் எத்தனையோ நெருக்கடிகள், இடையூறுகள் மத்தியில், போராட்டத்தின் எழுச்சிக் குரலாகத் தினமும் மக்களுக்கு ஒரு [illegible]ரமான ஒலி (3 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    கார்த்திகை 05    (21 - 11 - 1991)    வியாழக்கிழமை    ஓசை: 276

## வேலைக்குத் தீவகம் செல்வதில்லை தீவக அரச ஊழியர் தீர்மானம்

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து உள்ள மக்கள் தமது பழைய இடங்களுக்கு திரும்பிச் சென்று நிம்மதியாக வாழும் நிலை உருவாகும் வரை இராணுவ நடவடிக்கை காரணமாக தீவகத்திலிருந்து வெளியேறியுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் மீண்டும் வேலைக்காக தீவகம் செல்லவில்லை என தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்கள். தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் இருபெரும் தாக்குதல்கள்

# 30 இராணுவம் பலி: பலர் படுகாயம்

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று மேற்கொண்ட இரு பெரும் தாக்குதல்களில் முப்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பல நவீன ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

வடக்கில் கிளிநொச்சி மாவட்டம் பள்ளிக்குடாவிலும், கிழக்கில் பொலநறுவை மாவட்டம் சிங்கபுரவிலும் இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

## சுதந்திரத்திற்காக இன்னுயிர் நீத்த மாவீரர் வாரம் ஆரம்பம்

தமிழீழ மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது. தாயக சுதந்திரத்திற்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த அனைத்துப் போராளி

மாவீரர் எழுச்சி வாரத்தைத் தொடர்ந்து இன்று முதல் மாவீரர் வாரம் தமிழீழம் எங் (2 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் பிரதேசம்

...பொலநறுவை மாவட்டம் சிங்கபுரவிலும் இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

# சிங்கபுரவில் 20 இராணுவம் பலி

பொலநறுவ மாவட்டம் சிங்கபுரப் பகுதியில் விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட அதிரடித்தாக்குதல் ஒன்றில் இருபதிற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரும் ஓர் சாரதியும் கொல்லப்பட்டதாக, சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது.

இத்தாக்குதல் பற்றி மேலும் தகவல் வெளியிடுகை (4ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் கூற்றை கேள்விக்கு உள்ளாக்கும் தாக்குதல்

பொலநறுவை மாவட்டம் சிங்கபுரவில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் மூலம் புலிப்படையினரில் பெரும்பாலானோர் இராணுவத்தால் சூழப்பட்டிருக்கும் குடாநாட்டுக்குள்தான் முடங்கியுள்ளனர் என்ற அரச தரப்பு செய்திகளைக் (4ஆம் பக்கம் பார்க்க)

...தாயக சுதந்திரத்திற்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த அனைத்துப் போராளிகளையும் நினைவு கூரும்முகமாகவும், தமிழீழத் தேசியத்தை உலகிற்கு உணர்த்துவதற்காகவும் தமிழீழ மாவீரர் வாரம் உணர்ச்சி பூர்வமாக இன்று ஆரம்பமாகின்றது.

இவ்வாண்டுக்கான மாவீரர் வாரத்தை ஒட்டி பிரகடனப் படுத்தப்பட்ட ஒரு வாரகால

# காங்கேசன் பிரதேசம் பாதுகாப்பு வலயம்

உணவு லொறிகளின் போக்குவரத்திற்கு வசதியளிக்கும் வகையில் காங்கேசன்துறைப் பகுதியில் [பாதுகாப்பு] வலயம் ஒன்று உருவாக்கப்பட விருக்கின்றது. இது சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடனும் சிறிலங்கா இராணுவத்துடனும் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்கள்.

பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக புலிகளுடன் இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து செஞ்சிலுவைப் பிரதிநிதி (4ஆம் பக்கம் பார்க்கவும்)

# பல நவீன ஆயுதங்கள் மீட்பு

பள்ளிக்குடாவில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. விடுதலைப் புலிகள் கைப்பற்றிய [ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி ரகத் துப்பாக்கிகள் - 2
அதற்குரிய ரம் மகசீன்கள் -02
★ ஏ. கே. எல். எம் ஜி ரவை இணைப்புகள் - 575

(4ஆம் பக்கம் பார்க்க)

# பள்ளிக்குடாவில் 10 படை பலி

பள்ளிக்குடா இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல் ஒன்றில் பத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படு (4ஆம் பக்கம் பார்க்க)

# 4 புலிகள் வீரச்சாவு

பூநகரி பள்ளிக்குடாவில் நேற்றுக்காலை நடந்த இத்தாக்குதலின்போது ரமேஷ் (ரமணன், யாழ்ப்பாணம்) நாதன் (பா. சிவராஜ் - இன்ஸ்பெக்டர்ஏத்தம், பொத்துவில்) ஜேக்கப் (சி.சர்மிளன் அந்நாய் பூநகரி), சாந்தன் [சாந்தலிங்கம் கோயில் போரதீவு மட்டக்களப்பு] ஆகிய வீரவேங்கைகள் வீர மரணத்தை தழுவிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்.

# உயிரையும், உடமையையும் அர்ப்பணித்த மாவீரரை இனிவரும் சந்ததிகளும் கௌரவிக்க வேண்டும்

எமது மக்களுக்காக உயிரை மட்டுமல்ல, உணர்வுகளையும் அர்ப்பணித்து ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கும் முயற்சியில் வீரமரணத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மாவீரர்களை இன்றைய சந்ததி மட்டுமல்ல இனிவரும் சந்ததிகளும் நினைவு கூர்ந்து கௌரவிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரான திரு. கோ. மகேந்திரராசா மாவீரர் வாரத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 3 750 புலி வீரர்கள் வீரமரணமடைந்துவிட்டனர். ஒரு உன்னத இலட்சியத்திற்காக, எமது மக்களின் எதிர்கால சுபீட்சத்துக்காக தமது உயிர்களை ஈந்த இம் மாவீரர்களை எம் நெஞ்சங்களில் இருத்தி முகமாக பிரகடனப்படுத்தப்பட்ட மாவீரர் வாரத்தின் தொடக்க நாள் இன்றாகும்.

இன்றிலிருந்து தொடங்கும் இவ்வாரம் மாவீரர்களின் (4ஆம் பக்கம் பார்க்க)

கோ. மகேந்திரராசா



## மாவட்ட செயலகத்தில் தேசிய கொடி ஏற்றல்

மாவீரர் வார தேசியக் கொடி ஏற்றும் வைபவம் இன்று காலை எட்டு மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சு

வவுனியா பாவற்குளம் பகுதியில் 2ஆம் யூனிற் 6ஆம் யூனிற் ஆகியவற்றுக்கு இடை (4ஆம் பக்கம் பார்க்கவும்)

**இலவச இணைப்பு**
1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### விவாகப் பொருத்துனர் சேவை நிலையம்

சேவை நாடுகளில் உயர்பட்டம் பெற்ற பொறியியலாளர், ஆங்கில வைத்தியர்கள், வெளிநாடுகளில் சாதாரண தொழில் புரிவோர் ஆகியோரது ஜாதகங்கள் நூற்றுக்கணக்காக ஏற்பிடம் உண்டு. தொடர்பு: சு. ஆ. தர்மலிங்கம் 24, புறாடிலேன் கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். (R/1939)

### பொருந்துனர் சேவை நிலையம்

ஆதன பஞ்சவட்ட நருமாதி பீடத்தினரால் உடுவில் சண்டிலிப்பாயில் இரு பயன் தரும் தோட்டக்காணிகளும்; கொக்குவில் தாவடியில் இரு வசதிகொண்ட பெருவீடுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு- எஸ்- ஏ- தர்மலிங்கம். 24, புறாடிலேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். (R/1944)

### இடமாற்றம்

தீவகத்தில் நவீன வைத்திய வசதிகள் கொண்ட ''இரேம்ணம் வைத்தியசாலை'' இல. 129 ஸ்ரேசன்றோட் (புகையிரத நிலையம் முன்பாக) யாழ்ப்பாணத்தில் (தங்குமிட வசதிகள் உட்பட) தொடர்ந்து சேவையாற்றுகிறது. (R/1941)

## அடையாள அட்டை கட்டாயம்

[கொழும்பு]

இம்முறை க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் கட்டாயம் அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்று பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

அடையாள அட்டை இன்றி பரீட்சையில் தோற்றினால் அதற்குரிய பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

சுதந்திரத்திற்காக
...ம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த சென்றுவிட்ட எழிச்சி வாரத்தில் தமிழீழம் எங்கணும் வாழும் மக்கள்

## நினைவஞ்சலி





| லெப். கணேஸ் (தில்லை-டொமினிக் சாந்தன்) | 2-ம் லெப். தினேஸ் (தில்லை-அன்ரன் தினேஸ்) |
|---|---|
| பிறப்பு:- 05-08-1964 | பிறப்பு:- 13-06-1969 |
| இறப்பு:- 21-11-1986 | இறப்பு:- 27-11-1989 |

புதுக்குடியிருப்பு மண்ணில்
பூத்திட்ட புலிமலர்காள்
சில்லாலைப் புழுதியிலே
செழிப்புற்ற சிறுக்கைகளே!
இணைவிட்டு வளர்ந்தீரே!

ஒட்டுசுட்டான் களத்தினில்
உயிர்விட்ட கணேஸ் வேங்கை
மணலாற்று மண்ணில் வித்தான
பயமறியா தினேஸ் மறவன்
தாயொருத்தி வயிற்றினிலே
தளிர் விட்ட இருபுலிகாள்
தமிழ் மண்ணை மீட்டிடவே
தந்தீரோ நும் உயிர்களை
மண்ணுக்கு உரமான
மாவீரர் நீர் வாழ்க!

'சாந்திநேஸ்' சில்லாலை, புதுக்குடியிருப்பு.

உங்கள் பணிதொடரும்
தாய், தந்தை, மைத்துனர்,
சகோதரிகள், மருமகன் கிறேஸி
(B/3486)

## 1 ஆம் ஆண்டுநினைவஞ்சலி



## பிறப்பு அத்தாட்சிப் பத்திர படிவம் இல்லை

(ஈச்சமோட்டை)

யாழ். செயலக பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 1954 ஆம் ஆண்டிற்கு பின் பிறந்தவர்களுக்கான இருமடிக்க பிறப்பு அத்தாட்சிப் பத்திர படிவம் கடந்த ஒன்றரை மாதமாக கொழும்பில் இருந்து வராததனால் மக்கள் பெரும் அவதிப்படுவதை காண முடிந்தது. நாளாந்தம் மக்கள் செயலகத்துக்கு வந்து ஏமாற்றத்துடன் செல்கின்றனர். அடையாள அட்டை மற்றும் பிரதான காரியங்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தும் இதுவரை இடைக்காதவர்கள் பெரும் சிரமம் அடைவதை அவதானிக்க முடிகிறது. (43)

## யானை தாக்கியவர் மரணம்

யானை தாக்கி யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று மரணமானார்.

ஆனந்த கோமணி (முத்தையன் கட்டு) என்ற குடும்பஸ்தர், தமது தோட்டத்தில் நித்திரை செய்து கொண்டிருந்த போது யானையால் தாக்குண்டார். இவரதுசடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)

## நினைவு கூருகின்றோம்...

## 1991 - 11 - 21

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது காணாமற்போன 2 தமிழ்ப் பொறியியலாளர்கள்

1986 ஆம் ஆண்டு நாவற்காட்டுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**தயா** (செல்லத்துரை விக்னேஸ்வரன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

**நிலான்** (ரவி - மன்னார்)

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். கணேஷ்** (தில்லை டொமினிக் சாந்தன் ''சாந்திநேஸ்'' - புதுக்குடியிருப்பு)

1987 ஆம் ஆண்டு ஆனைக்கோட்டைச் சந்திப் பகுதியில் இந்தியப் படையினர் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட சமயம் பாதுகாப்பு அகழியினுள் பதுங்கியிருந்தபோது படுகொலை செய்யப்பட்டு அகழியினுள்ளேயே போட்டு மூடப்பட்டுக் கிடந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த குழந்தை, 8 பெண்கள், ஆண்

1988 ஆம் ஆண்டு கைதடிப்பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**றோகான்** (சின்னப்பர் றோகான் - குருநகர், யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொலைப்பட்ட எமது ஆதரவாளர்

**தம்பிராசா சங்கரன்**

1990 ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த காங்கேசன்துறை, கீரிமலை, மாவிட்டபுரம் பகுதிகளில் சிறிலங்காப் படையினருடன் நிகழ்ந்த மோதற் சம்பவங்களில் வீரச்சாவெய்திய

**செழியன்**

வேண்டும்.

கடந்த சென்றுவிட்ட எழுச்சி வாரத்தில் தமிழீழம் எங்கணும் வாழும் மக்கள் எழுச்சி பெற்று எழுந்து மாவீரர் வாரத்திற்கான சகல ஏற்பாடுகளையும் துரித கதியில் மேற்கொண்டதனால் தமிழீழம் மாவீரர் வாரத்திற்காக தமிழீழம் எழுச்சிக் கோலம் பெற்றிருக்கின்றது. அனைத்துப் பகுதிகளிலும் மாவீரர் நினைவு வளைவுகளும், நினைவுச்சின்னங்களும் தூபிகளும் அமைக்கப்பட்டதுடன் அனைத்து வீதிகளும் துப்புரவாக்கப்பட்டு மஞ்சள், சிவப்பு வர்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, இடையிடையே வீதியின் இருமருங்கே எழுச்சியூட்டுவதும், மாவீரர்களை நினைவு கூருவதுமான வாசகங்கள் அடங்கிய பெரிய அளவிலான பதாதைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அரச அலுவலகங்கள் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி மன்றங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களிலும் இன்று காலை 8.00 மணிக்கு தமிழீழத்தின் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்படவிருக்கின்றது.

இத்தேசியக்கொடி ஏற்றலுடன் இம்மாவீரர் வார நிகழ்வுகள் அனைத்தும் ஆரம்பமாகும்.

மாவீரர் வாரம் முழுவதும் எழுச்சியூட்டும் பல நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே திட்டமிடப் பட்டிருக்கின்றன. இதன்படி தமிழீழத்தின் அனைத்துப்பகுதிகளிலும் இருந்து இம்மாவீரர் வாரத்தில் தமிழ்த்தேசியம் தேசம் பெரும் பரவ ஆரம்பிக்கும்.



## லெப்டினன் நெவில்
(நடராசா - நாகேஸ்வரன்)

தாயின் மடியில் 11-10-1971 — தாயக மண்ணில் 21-11-19●

மாங்குளம்(?) பரந்தன் கொக்காவில் சந்தியில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்தார்.

எம் இதயக் கொழுந்தே நீ எங்கு சென்றாய்?
உனது பிறப்பை தமிழுக்கே அர்ப்பணித்தாய்
உடன் பிறப்பு சொந்தபந்தம் தனை மறந்து
மண்காக்கப் புறப்பட்டு விண்தானாம் சென்றாயே
நெவில் நீ எதனைத்தாக்க ஏந்தினாய் ஆயுதத்தை
இத்தனை கெதியில் உன்பணி முடிந்ததா?
பொங்குதமிழ் காக்கப் புறப்பட்ட வேங்கையே
மங்குதமிழ் உண்டோ? மார்தட்டிப்புறப்பட்டாய்
தமிழீழ மெல்லாம் நாட்டிடுவோம் தமிழ்க்கொடி
எங்கும் புலிக்கொடி நாட்டி மாவீரன் உன்னை -
நாம் வணங்கிடுவோம்.

உன்பிரிவை நினைத்துவாடும்
ஐயா, அம்மா, அண்ணா,
அண்ணி, தம்பிமார், தங்கை,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

அச்செழு,
நீர்வேலி.

(B/3492)

வழிகளில் வீரச்சாவெய்திய

**செழியன்** (சிதம்பரப்பிள்ளை சற்குணராஜா - 5/2 ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

**சரவணன்** (கிருஷ்ணசாமி கணேசலிங்கம் - கால் ஏக்கர், குமரபுரம், பரந்தன்)

**நெல்சன்** (வீரசிங்கம் இந்திரகுமார் - கிளிநொச்சி)

**கணேஷ்** (நாகசோதி ஜீவநேசன் - புத்தூர்)

**லெப். நெவில்** (நடராசா நாகேஸ்வரன் - போயிட்டி, அச்செழு, நீர்வேலி)

**லெப். தம்பி** (கந்தசாமி தம்பி - மயிலிட்டி)

**ஞானம்** (ராமசாமி சந்திரலிங்கம் - தலவாக்கொல்லை, கண்டி)

பலாலியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**நாமகள்** (தேவமனோகரி வைரமுத்து - முன்னம்போடி வெட்டை, தோப்பூர், திருமலை)

**லக்கி** (மனோறஞ்சிததேவி கார்த்திகேசு, சாம்பலோடை, காரைநகர்)

**கஜலக்ஷ்மி** (இருதயம்மா பேரின்பம் - குட்டிபுறமுனை, இரான், மட்டக்களப்பு)

**பூங்குயில்** (சாந்தினி மாரிமுத்து 710, சவீற்சென்ரர், வட்டக்கச்சி)

கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கணேஷ்** (சித்திரவேலாயுதம் பிரபாகரன் - இருபாலை)

மாங்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் ஜெகன்** (சுந்தரலிங்கம் சுரேஷ்குமார் - மணலாறு)

**லெப். மாவி** (துரைராஜா முத்துக்குமார் - ஒலுமடு, நெடுங்கேணி, முல்லைத்தீவு)

ஆனையிறவு காவலரண் பகுதியில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலினால் காயமுற்று வீரச்சாவெய்திய

**அறிஞன்** (நாகேஸ்வரன் ஜெயராஜ் - 599, பாடசாலை வீதி, செல்வநாயகபுரம், திருமலை)

பலாலிமுகாம் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வசாவிளான் குடியமலத்தைச் சேர்ந்த பொதுமகன்

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி (B/3498)

## சிந்தனைக்கு

முழங்கால் மண்டியிட்டு வாழ்வதை விட கால்கள் நிமிர்ந்து நிற்க உயிர் துறப்பதே மேல்

-எமிலியானோ ஸபாடா

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 21-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# வழங்கக் கூடியது கௌரவம் மட்டுமே

மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது. எமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம் மின்னுயிர் நீத்த போராளிகளின் நினைவு நாட்கள் அவை. இன்றிலிருந்து இருபத்தியேழாம் திகதி வரை தமிழீழமெங்கும் மாவீரர்களை தமிழீழமக்கள் நினைவு கூருகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினரான சங்கர் (சத்தியநாதன்) 1982 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் இருபத்தியேழாம் திகதி தமிழீழ விடுதலைக்காக முதல் களப்பலியானார். அன்றிலிருந்து இன்று வரை 3500 க்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் சுதந்திரத்திற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ளனர். இந்த மாவீரர் வாரம் ஒரு களியாட்டத்திற்குரிய காலமல்ல. அதேவேளை சோகம் ததும்பிய நாட்களுமல்ல இந்நாட்கள் எமது மண்ணிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் தமது உயிரைத் தியாகம் செய்த வீரவேங்கைகளை மக்கள் நினைவு கூருவதோடும் அஞ்சலி செலுத்துவதோடும் தமது சுதந்திர எழுச்சியை வெளிக்காட்டும் நாளும் ஆகும்.

எங்களுக்காக மடிந்த உடன் பிறப்புக்களே! உங்களை நாங்கள் மறக்கவில்லை. உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களிலே நிழலாடும் உங்களுக்கு நாங்கள் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்பதே மாவீரர் வாரங்களில் நாம் வெளிக்காட்டும் நிகழ்வுகளாகும்.

ஒரு போராளி அதிலும் விடுதலைப் புலியாக உள்ளவன் போராடப்புறப்படும் போதே தனது சாவையும் எதிர்பார்த்து - அனேகமாக நிச்சயப்படுத்திக் கொண்டே புறப்படுகின்றான். அவர்களின் கனவாக தமிழ் மண்ணின் மீட்பு, தமிழ் மக்களின் சுதந்திரம் என்பன மட்டுமேயாகும். அதாவது தனது மரணம் தமிழ் மக்களின் விடிவுக்காக என்பதை அவன் நிச்சயப்படுத்திக்கொண்டே களம் செல்கின்றான், போராடுகின்றான், வீரச்சாவு எய்துகின்றான்.

சகல போராளிகளும் உலகில் உள்ள சாதாரண மனிதர்களின் அபிலாசைகளை உடையவர்களாகவே உலகில் பிறந்து வளர்கின்றார்கள். ஆனால் இடையில் தனது இனம் படும் அல்லல்களைக் கண்டே அவன் போராளி ஆகின்றான். அவனுக்கும் தாய், தந்தை, சகோதர சகோதரிகள் உற்றார் உறவினர் என்ற பாசப் பிணைப்புக்கள் இல்லாமல் இல்லை. இளமை உணர்வுகளோ அன்றி வேறு அபிலாசைகளோ இல்லாமலும் இல்லை. அனால் இவையாவற்றிற்கும் மேலாக தமது இனத்தின் விடுதலை முதன்மையானது என்று அவன் கருதுவதினாலேயே அவன் போராளியாகின்றான் களம் செல்கின்றான். பெரும் பாலும் தான் அனுபவிக்க முடியாத ஒன்றிற்காக தனது உடமைகள் யாவற்றிலும் மேலான உயிரை தமது இனத்தின் நலனுக்காகவும் விடிவிற்காகவும் அவன் அர்ப்பணிக்கின்றான்,

விடுதலைப் போராளிகளின் சாம்பல் மேட்டில் இருந்து தான் ஒரு இனத்தின், நாட்டின் சுதந்திரம் பிறக்கின்றது. இது தமிழினத்திற்கு மட்டும் உரியதல்ல அடக்கு முறையில் இருந்து விடுதலை பெற்ற, பெறப் போராடும் சகலருக்கும் பொருந்தும். அதாவது ஒரு இன மக்கள் அல்லது ஒரு நாடு சுதந்திரமாகவும் இறைமையுடையதாகவும் வாழவேண்டுமானால், துன்பமும் தியாகமும் செய்துதான் ஆகவேண்டியுள்ளது.

இவர்கள் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் தியாகங்களுக்கும் தம்மினத்திடம் இருந்தோ அன்றி நாட்டிடம் இருந்தோ எதையும் எதிர்பார்க்கவில்லை. அதேவேளை தமது உயிரை தியாகம் செய்தவர்களுக்கு பெரும் கைமாறு எதையும் செய்துவிடவும் முடியாது.

ஆனால் அவர்களை நினைவு கூரவும், அவர்களின் அர்ப்பணிப்புக்காக அஞ்சலி செலுத்தவும் அவர்களின் இலட்சியங்களைப் பின்பற்றிச் செல்லவும் முடியும். இது தமிழ் இனத்தின் கடமையும் கூட. இதற்குரிய வாரமே மாவீரர் வாரமாகும். இவ்வாரத்தில் இனத்தின் விடுதலைக்காக தம்முயிர் ஈந்த மாவீரர்களை நினைவு கூருகின்றோம். அவர்களை கௌரவிப்போம் அவர்களின் இலட்சியங்களை நோக்கி நாமும் முன்னேறுவோம்.

(நேற்றைய தொடர்ச்சி)

# மாவீரர் வாரத்தில் 1100 தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ மீட்பு நிதி செலுத்திய 1100 பேருக்குமாவீரர் வாரத்தில் கடன் மீளளிப்பு செய்யப்படவுள்ளது. மாதாந்த வாரியாக தெரிவு செய்யப்பட்டோருக்கு இந்த மீளளிப்பு வழங்கப்படும். மாசி, பங்குனி, சித்திரை மாதங்களுக்குரிய மீளளிப்பை நல்லூர், கோப்பாய், வடமராட்சி கிழக்கு, உடுவில், மானிப்பாய், ஆகிய உதவிஅரசாங்க அதிபர்பிரிவிலுள்ள கீழ்வரும் இலக்கமுடையோருக்கு கிடைக்கும். [ஏனைய மாதங்களுக்குரியவை தொடர்ந்து வெளிவரும்]

### நல்லூர் - மாசி

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. ந. 242 | 05. யா. ந. 1014 | 09. யா. ந. 1694 | 13 யா. ந. 2844 |
| 02. யா. ந. 281 | 06 யா. ந 1387 | 10 யா. ந 1833 | 14 யா. ந. 3128 |
| 03. யா. ந 317 | 07. யா. ந 1425 | 11. யா. ந. 2173 | 15. யா. ந. 3984 |
| 04. யா. ந. 871 | 08 யா. ந 1567 | 12. யா. ந. 2459 | 16 யா. ந. 4158 |
| | | | 17. யா. ந. 5341 |

### நல்லூர் - பங்குனி

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. ந. 11 | 05. யா. ந. 781 | 09. யா. ந. 2304 | 13 யா. ந. 4721 |
| 02 யா. ந 581 | 06. யா. ந. 1198 | 10 யா. ந. 3956 | 14. யா. ந 4768 |
| 03. யா. ந 683 | 07. யா. ந. 1629 | 11. யா. ந 4230 | 15. யா. ந. 4874 |
| 04. யா. ந. 685 | 08 யா. ந. 1948 | 12 யா. ந. 4392 | 16. யா. ந. 5138 |

### நல்லூர் - சித்திரை

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. யா. ந 41 | 5. யா. ந. 275 | 9. யா. ந. 900 | 13. யா. ந. 3682 |
| 2 யா. ந. 138 | 6. யா. ந. 427 | 10. யா. ந 2238 | 14 யா. ந. 4725 |
| 3 யா. ந. 139 | 7. யா. ந 595 | 11. யா. ந 2540 | 15. யா. ந 4995 |
| 4. யா. ந. 225 | 8. யா. ந. 843 | 12. யா. ந 3297 | 16 யா. ந. 5020 |

### கோப்பாய் - மாசி

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. யா. கோ. 39 | 5 யா, கோ. 841 | 9 யா. கோ. 3530 | 13. யா. கோ. 5249 |
| 2 யா. கோ. 59 | 6, யா. கோ. 2649 | 10 யா. கோ. 3652 | 14 யா. கோ. 5844 |
| 3. யா. கோ. 172 | 7. யா. கோ. 2676 | 11. யா. கோ. 3730 | |
| 4; யா. கோ. 784 | 8. யா. கோ. 3065 | 12. யா. கோ. 4158 | |

### கோப்பாய் - பங்குனி

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. யா. கோ. 285 | 5. யா. கோ. 915 | 9. யா. கோ. 2403 | 13. யா. கோ. 4341 |
| 2. யா. கோ. 395 | 6. யா. கோ. 1316 | 10. யா. கோ. 2963 | 14 யா. கோ. 5595 |
| 3. யா. கோ. 561 | 7. யா. கோ. 1861 | 11. யா. கோ. 3685 | |
| 4. யா. கோ. 601 | 8. யா. கோ. 1994 | 12 யா. கோ. 3877 | |

### கோப்பாய் - சித்திரை

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. யா. கோ. 279 | 4 யா. கோ. 497 | 7. யா. கோ. 910 | 10. யா. கோ. 2214 |
| 2. யா. கோ. 432 | 5 யா. கோ. 538 | 8 யா. கோ. 1059 | 11. யா. கோ. 3191 |
| 3. யா. கோ. 478 | 6. யா. கோ. 580 | 9. யா. கோ. 1132 | 12: யா. கோ: 4360 |
| | | | 13. யா. கோ. 6297 |

### மானிப்பாய் மாசி

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. மா. 49 | 04. யா. மா. 216 | 07. யா. மா. 1645 | 10. யா. மா. 3139 |
| 02. யா. மா. 91 | 05. யா. மா. 358 | 08. யா. மா. 2 13 | 11. யா. மா. 3663 |
| 03. யா. மா. 100 | 06. யா. மா. 1127 | 09. யா. மா. 2401 | |

### மானிப்பாய் பங்குனி

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. மா. 337 | 04. யா. மா. 1612 | 0 . யா. மா. 3242 | 09 யா. மா. 3286 |
| 02. யா. மா. 710 | 05. யா. மா. 2593 | 08. யா. மா. 3284 | 10. யா. மா. 3865 |
| 03. யா. மா. 807 | 06. யா. மா. 8140 | | |

### மானிப்பாய் சித்திரை

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. மா. 213 | 04. யா. மா. 897 | 06. யா. மா. 2205 | 09 யா. ம .3208 |
| 02. யா. மா. 465 | 05. யா. மா 1521 | 07 யா. மா. 2956 | 10 யா. மா. 3698 |
| 03. யா. மா. 713 | | 08. யா. மா. 3169 | |

### வடமராட்சி கிழக்கு - பங்குனி

தொடர்பு இலக்கம்

1. யா. வ. கி. 180

### வடமராட்சி கிழக்கு - சித்திரை

தொடர்பு இலக்கம்

1. யா. வ. கி. 79 2 யா. வ. கி. 310

### வெளியிடப்படாத இலக்கங்கள்

நல்லூர் - தை

1. யா. ந. 4924 2. யா. ந. 5205

### பிழையாக அச்சிடப்பட்டவை

| சரியான இலக்கம் | தவறாக அச்சிடப்பட்ட இலக்கம் |
|---|---|
| கோப்பாய் - தை | |
| 1. யா. கோ. 2417 | 1 யா. கோ. 2317 |
| 2. யா. கோ. 5634 | 2. யா. கோ. 6604 |
| தெல்லிப்பளை - தை | |
| 1 யா. தெ. 832 | 1. யா. தெ. 332 |

தேசிய பரப்புச் சேவையை நடத்தி வருவது ஒரு சாதாரண சாதனையல்ல எமது வானொலியின் ஓராண்டு நிறைவானது இந்த சாதனையைத்தான் எடுத்தியம்புகிறது.

எமது எதிரியான சிங்கள அரசு தனது கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்களை எமதுபோராட்டத்திற்கு எதிராக முழுமையாக முடுக்கி விட்டிருக்கிறது உண்மையைத் திரித்துப் பொய்களைப் புனைந்து மக்களைக் குழப்பி எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கில் ஒரு பிரச்சாரப் போரை நடத்தி வருகிறது. எதிரியுடன் கைகோர்த்து நின்று தமிழ்த் துரோக சக்திகளும் எமக்கு எதிராக மிகவும் கேவலமான விஷமப் பிரசாரத்தை நடத்தி வருகின்றன. இந்த சூழலில் எமது தேசியப் போராட்டத்தின் ஓசையாகக் குரலெழுப்பும் எமது வானொலியின் சேவை முக்கியமாகிறது

மேலும் எதிரியின் பொய்மையான கருத்துப்போருக்கு எதிராக உண்மையின் ஆயுதமாக எமது வானொலியின் குரல் ஒலிக்க வேண்டும். ஒரு சத்திய யுத்தத்தின் போர் முரசாக 'புலிகளின் குரல்' ஒலிக்கவேண்டும்.

'புலிகளின் குரல்' வானொலி தனது புரட்சிகரப் பணியில் வெற்றிபெற எனது நல்லாசிகள் எனவும் தெரிவித்தார்,

## அதிபர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சகல பாடசாலை அதிபர்களையும் சம்பளம் கொடுப்பனவு தொடர்பாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார் (ச

## 'புலிகளின் குரல்'

# விமரிசையான முறையில் ஓராண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு சேவையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது.

பரிசளிப்பு நிகழ்வும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்ற இந்த விழாவில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆசியுரையும் நிகழ்த்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு. கோ. மகேந்திரராசா உட்பட பல முக்கியஸ்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

புலிகளின் குரல் வானொலியின் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு திரு. கோ. மகேந்திரராசா பரிசில்களை வழங்கினார்.

புலிகளின் குரல் வானொலி பற்றிய இளையவனின் ஆய்வுரையும் இடம் பெற்றது

சிறுவர், சிறுமிகளின் கலை நிகழ்ச்சியும், நாடகம், மற்றும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அரங்கம் நிறைய மக்கள் நிறைந்திருந்து நிகழ்ச்சிகளை கண்டு களித்தனர். (நி)

---

## மாவீரர் நாள்

காலம்: 22-11-91 நேரம்: 2-00 மணி

பரியோவான் கல்லூரி மண்டபத்தில்

நிகழ்ச்சிகள்:

- ★ நாட்டிய நாடகம்
- ★ வில்லிசை: மண்மீட்க விரைந்திடுவோம்
- ★ நாடகம்: மண்ணா? மானமா?
- ★ நாட்டிய நாடகம்: மண் மீட்புக்காய் புறப்பட்டவர்கள் வீழ்ந்தவர்கள் அல்ல; விதைக்கப்பட்டவர்கள்
- ★ புரட்சிக் கானங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
யாழ். மாவட்டம்

(B/3505)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன்ட் 'சுபராஜ்

(நவரத்தினம் பரஞ்சோதி)

| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 1971-06-03 | 15-11-1990 |

நீ சோதியாய் தோன்றி எட்டு திசைகளில் வாழும் தமிழர்கள் மானம் காக்க துணிந்த வேங்கையே நீ களம் பல கண்டு மண் காத்து தமிழீழம்பெற நினைத்தாய் அணி அணியாக வந்த ஆக்கிரமிப்பாளரை அடிமேல் அடி அடித்தாயே' காரைநகரில் உன் உயிரை துறந்தாயே உன் செய்தி கேட்டு செயல் இழந்து நின்றோம்: சோதியே ஆண்டு பல சென்றாலும் அழியாது உன் தியாகம் உன் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது

ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி,

இங்ஙனம்
அப்பா, அம்மா சகோதரங்கள்,
உற்றார், உறவினர்,
போராளிகள் நண்பர்கள்.

களபூமி,
காரைநகர்.

((B/3504)

---

உயிரையும் போராட்ட வாழ்வை, தியாக உணர்வுகளை எமது மக்கள் அனைவரும் மீட்டுப் பார்க்கும் விதத்தில் அமைந்திருக்கும். இதன் காரணமாக எம்மால் விடுவிக்கப்பட்ட பகுதிகள் புரட்சிகர விழாக்கோலம் பூண்டிருக்கின்றன.

இந்த மண்ணில் புதிய வரலாற்றை, வீரகாவியத்தை படைத்துச் சென்ற இம் மண்ணின் மைந்தர்களை நினைவு கூர மக்கள் தயாராக வேண்டும்.

சாதாரண மனிதர்களாகக் குடும்பம் எனும் வட்டத்துக்குள் ஆசாபாசங்களுடன் சுற்றிச்சுழன்ற சராசரி மனிதர்கள்தான் இம் மாவீரர்கள். ஆனால், விடுதலை உணர்வால் உந்தப்பட்டுப் போராட்ட வாழ்வில் அடிவெடுத்து வைத்த பின்னர் அவர்கள் புடம் போடப்பட்டார்கள்.

தனிமனித அபிலாசைகளுக்கு தேசம் அப்பால் எனும் விரிந்த வட்டத்துக்குள் தம்மை உட்படுத்தி தேச நலனுக்காகவே உழைத்து மரணத்தையும் அரவணைத்துக் கொண்டார்கள்.

இவர்களது போராட்ட வாழ்வு முனிவர்களது வாழ்வைப் போன்று பற்றற்று இருக்கவில்லை.

ஆசைகளும், பாசங்களும் அவர்களிடம் இருந்தன. கவலைகளையும், துன்பங்களையும் அவர்கள் சந்தித்தார்கள். ஆனால் தாங்கள் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்து சில மனித உணர்வுகளை மட்டுப்படுத்தினார்கள். சிலவற்றைத் தியாகம் செய்தார்கள்.

ஆகவே மாவீரர்கள் எமது மக்களுக்காக தங்களது உயிர்களை மட்டும் அர்ப்பணிக்கவில்லை. உணர்வுகளையும் தியாகம் செய்திருந்தார்கள்.

இவ்விதமாக ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கும் முயற்சியில் வீரமரணத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மாவீரர்களை இன்றைய சந்ததி மட்டுமல்ல இனிவரும் சந்ததிகளும் நினைவு கூர்ந்து கௌரவிக்க வேண்டும்.

மாவீரர்களை நினைவு கூருவது என்பது வெறும் சம்பிரதாயமாக இருக்க மாட்டாது. இவர்களது தேசபக்தியை, அர்ப்பண உணர்வை ஒருகணம் மீட்டிப் பார்ப்பதுடன், தமக்காக வாழாது மக்களுக்காக மடிந்த இம் மாவீரர்களது தியாகங்களை நாம் மதிக்கவும் வேண்டும். குடும்பம் எனும் சுவரையும் கடந்து நாட்டுக்காக உழைத்த செயலை நாம் மதிக்க வேண்டும். அந்த உழைப்பு முயற்சியில் உயிரையும் கொடுத்த உன்னத தியாகத்தை நாங்கள் மதிக்க வேண்டும்.

இந்த மதிப்பு என்பது எமது பண்பாட்டின் ஒரு முக்கிய அம்சமாகப் பதியப்படவும் வேண்டும்.

அப்போதுதான் இனிவரும் சந்ததிகளும் இம் மாவீரர்களது உணர்வுகளை உள்வாங்கிய ரீதியாகப் பெற்று இம் மண்ணில் என்றென்றும் சுதந்திரக் காற்றை உலாவரச் செய்வார்கள்.

இன்று தொடக்கம் (21-11-1991) எதிர்வரும் 27ஆம் திகதி வரும் தமிழீழத் தேசிய நாளாகிய மாவீரர் நாள் வரை நினைவு கூரல் தொடரும்.

26ஆம் திகதி நள்ளிரவு 12-00 மணிக்கு நினைவொலி எழுப்பலுடன் மாவீரர் நாள் உத்தியோக பூர்வமாக பறைசாற்றப்படும்.

அந்த நேரத்தில் பள்ளிக்கூடங்கள், கோயில்கள், தேவாலயங்கள் ஆகியவற்றிலுள்ள மணிகள் அசைத்து அடிக்கப்படும்.

மக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மாவீரர்களை நினைவுகூர வேண்டும். என்பதே பேரொலி எழுப்பலின் பிரதான நோக்கமாகும்.

அந்தப் பேரொலியுடன் மக்கள் எழுந்து நிற்பர். இரண்டு நிமிடங்கள் மாவீரர்களையும் அவர்களது தியாகச் செயல்களையும் மனதில் நினைத்தபடி மௌன அஞ்சலி செய்வர்

## பதவி விலகக்கோரிக்கை

யாழ். பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற வரலாற்றுத்துறை விரிவுரையாளர் தெரிவிற்கான நேர்முக தேர்வில் இடம் பெற்ற முறை கேடுகள் குறித்து பல கண்டனச் சுவரொட்டிகள் நேற்று முன்தினம் பல்கலைக் கழக வளாகத்தினுள் ஒட்டப்பட்டிருந்தன

இச் சுவரொட்டிகளில் முறைகேட்டிற்குக் காரணமான நிர்வாகிகளும் பதவி விலகுமாறு கோரப்பட்டிருந்தது

---

பல நவீன

★ ரி-56-2 ரகத் துப்பாக்கிகள் - 04 அதற்குரிய ரவைக் கூடுகள் - 19
★ ரி-56-1 ரகத்துப்பாக்கி -02
★ 203 ரகத்துப்பாக்கி - 01 அதற்குரிய எறிகணைகள் -02 ★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் - 10 ★ 7. 62 நடுத்தர ரவைகள்- 2105
★ குண்டு துளைக்காத கோல்சர் - 06

---

குண்டு வீச்சு

யிலுள்ள மக்கள்குடியிருப்பு பகுதிகளின் மீது நேற்றுக் காலை விமானக் குண்டு வீச்சுகள் இடம் பெற்றுள்ளது சிறிலங்கா விமானப்படையின் இத் தாக்குதல்களால் தமிழ் மக்களின் உடமைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

---

பள்ளிக்குடா

காயமடைந்தனர். புலிகள் பல நவீன ஆயுதங்களைக் கைப்பற்றினர். புலிகள் தரப்பில் நான்குபேர் வீரச்சாவு அடைந்தனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்று அதிகாலை 5·45 மணியளவில் பள்ளிக்குடா இராணுவமுகாமிலிருந்து 500 யார் தூரமளவில் வெளியில் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் பத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்பலர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலை உர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்தது:

---

காங்கேசன்

கள் நேற்று பலாலி இராணுவ முகாம் சென்று இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினர்.

---

சிங்கபுர

யில் இத்தாக்குதலின் போதுமேலும் பல படையினர் காயமடைந்திருக்கலாம் என்வும் தெரிவித்தது.

இத்தாக்குதலில் 300க்கு மேற்பட்ட புலிகள் ஈடுபட்டிருக்கலாம் எனவும், வீதியில் நிலக்கண்ணிகளை அகற்றிக்கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன,

---

அரசின்

கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. என பி. பி. ஸியின் கொழும்பு முகவர் லூசியன் கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வடபுலத்திலும், கிழக்கு மாகாணத்திலும் புலிப்படையினர் முற்றாகத் துரத்தப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வர முயற்சி எடுப்பதாக அரச வட்டாரங்கள் அண்மைக் காலங்களில் கூறிவந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

---

மாவட்ட

அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன் அவர்களால் கொடியேற்றப்படும். மேலும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களால் மாவீரர் உரையரங்கும் நடைபெறவுள்ளது.

---

வேலை

சேர்ந்த ஊழியர்கள் நேற்றையதினம் யாழ். இந்துக் கல்லூரியில் கூட்டம் ஒன்றை கூட்டி தீவக இடம் பெயர்ந்த அரச, அரச சார்பற்ற ஊழியர் சங்கம் என்னும் பெயரில் ஒரு ஸ்தாபனத்தையும் உருவாக்கி உள்ளார்கள்,

இதன் தலைவராக வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி புலேந்திரன் அவர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உப-தலைவர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் எவ். இளங்கோவன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எம். வேதநாயகம் அவர்களும் செயலாளராக வேலணை கிராம சேவையாளர் நா. சுந்தரராஜா அவர்களும் பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்டனர்.

---

மாவீரர்களான இம் மண்ணின் மைந்தர்களே!

எமது தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்களை அர்ப்பணித்த உங்களையும், உங்களது தியாகச் செயல்களையும் என்றும் நான் மறவேன். தமிழீழத்தின் குடிமக்களாகிய எங்களின் பேச்சிலும், உணர்விலும் மாவீரர்களான உங்களது இலட்சியங்களே நிறைந்திருக்கும்.

சுதந்திர வேட்கையுடன் நீங்கள் உலாவித்திரிந்த இந்த மண்ணின் மீது சபதம் எடுத்துக் கொள்கின்றேன். உங்களைப்போன்றே நாமும் எமது தாய் நாட்டின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும், பெருமைக்கும் என்றும் பாடுபடுவோம். இது உறுதி.

இவ்விதமான உணர்வுடன் மாவீரர்களை நினைத்து மக்கள் அஞ்சலி செய்வர்.

27ஆம் திகதி இரவு நடைபெற இருக்கும் கூட்டங்கள்மற்றும் நிகழ்ச்சிகளுடன் இம்முறை மாவீரர் நாள் விழா இனிது முடிவுறும்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, ஆம் 31 இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது